பக்கங்கள்:11 விலை : 30/-

காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 19 வியாழக்கிழமை 03.03.2022 கதிர் 118



இனிது ரகசியம் அல்ல!

என்னுடைய வாசகரான – கொழும்பு புறநகர்ப் பகுதியில் வசிக்கும் – அம்மணி ஒருவர் நேற்று அழைப்பு எடுத்தார். தனது சோகக் கதையை, அவல நிலையை ஒரு தடவை எழுத மாட்டீர்களா என்று கேட்டார்.

அவர் பிரச்சினையை ☞2

# ஜெனிவா அலுவலக உயர் அதிகாரிகளுடன் 5 தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் உரையாடல்!

## இணையவழியில் ஒரு மணி நேரம் பேச்சு

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் ஜெனிவா அலுவலக உயர் அதிகாரிகளுடனான முக்கிய இணையவழி சந்திப்பு ஒன்று ஐந்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுடன் நேற்றுமுன்தினம் இலங்கை நேரம் இரவு 7 மணிக்கு நடைபெற்றது.

இந்தத் தகவலை ரெலோவின் ஊடகப்பேச்சாளர் சுரேந்திரன் குருசுவாமி ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது: –

ஐந்து தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு 25 பெப்ரவரி 2022 திகதியிடப்பட்டு ☞2

# ஐ.நா. ஆணையாளர் – பேராயர் ஜெனிவாவில் முக்கிய சந்திப்பு

## அதிர்ச்சியில் ராஜபக்ஷ அரசு



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையாரை கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை நேரில் சந்தித்துப் பேசினார்.

இருவருக்கும் இடையிலான இந்த முக்கியத்துவமிக்க சந்திப்பு ஜெனிவாவில் நேற்று நடைபெற்றது. ☞2

## ஜெனிவாவில் இலங்கைக்கு இம்முறை களங்கம் ஏற்படாது

### இப்படி நம்புகின்றார் நீதி அமைச்சர்



ஜெனிவாவில் தற்போது நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை மாநாட்டில் இலங்கைக்குக் களங்கம் ஏற்படாது என நாம் நம்புகின்றோம் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். (விவரமான செய்தி 4ஆம் பக்கத்தில்)

## யாழ்.பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 03

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவத்தின் இரண்டாவது அமர்வு இன்று ஆரம்பமாகவுள்ளது. இன்று முதல் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள பட்டமளிப்பு வைபவத்தின் எட்டு அமர்வுகளில் 2 ஆயிரத்து 619 பேர் பட்டங்களைப் பெறவுள்ளனர். ☞9




## இன்றும் ஏழரை மணிநேரம் மின்வெட்டு

கொழும்பு, மார்ச் 03

நாடு முழுவதும் இன்றும் ஏழரை மணித்தியாலங்களுக்கு மின்வெட்டு அமுல்படுத்தப்படும் எனப் பொதுப்பயன்பாடு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதற்கமைய, இன்று காலை 8 மணிமுதல் மாலை 6 மணி வரையான காலப்பகுதியினுள் 5 மணிநேரம் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

அவ்வாறே, மாலை 6 மணி முதல் இரவு 11 மணிவரையான காலப்பகுதியினுள் இரண்டரை மணிநேரமும் மின்தடை அமுலாகும் எனவும் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்னாயக்க அறிவித்துள்ளார்.

## பட்டமளிப்பு விழாவுக்காக விசேட போக்குவரத்துக்கு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு பல்கலைக்கழக சுற்றுப்புறப் பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் முகமாக விசேட போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி இன்று வியாழக்கிழமை நாளைமறுதினம் சனிக்கிழமை வரை மூன்று தினங்களிலும் காலை ☞2

## வாள்வெட்டில் ஒருவர் காயம்

### தாக்குதல் நடத்திய ஒருவர் மடக்கிப் பிடிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். நவாலிப் பகுதியில் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் வீடு புகுந்து வாள்வெட்டுக் குழு நடத்திய ☞9

## துப்பாக்கி வாங்க வரிசையில் காத்திருக்கும் உக்ரைன் மக்கள்



ரஷ்யப் படைகளுக்கு எதிராகப் போரிடுவதற்காகத் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களை நீண்ட வரிசையில் நின்று ☞9

## 600 பொருள்கள் இறக்குமதி தடை



அத்தியாவசியமற்ற 600 பொருள்களுக்கான இறக்குமதியைத் தடை செய்வதற்கான வர்த்தமானி நேற்றிரவு வெளியாகும் என்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில நேற்றுப் பகல் ☞9

## அரசியல் நோக்கத்துக்காக கையெழுத்துப் போராட்டம்

### முன்னாள் எம்.பி. சுரேஷ் சந்தேகம்



(எஸ்.நிதர்ஷன்)

ஏற்கனவே ஐ.நா. சபையில் முன்வைக்கப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்ட நீக்கம் தொடர்பான தீர்மானங்களை ☞9



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செவிமடுத்தேன். பாவம் அம்மணி. உண்மையில் அவல நிலைமைதான்.

"என் வீட்டில் விறகு அடுப்பு மூட்டி எரிக்க முடியாது. காஸ் அடுப்புத்தான். காஸ் சிலிண்டர் அடுப்புகள் திடீரென நெருப்புப் பற்றி எரிந்து வெடிக்கத் தொடங் கியதும், மண்ணெண்ணெய் குக்கரைப் பயன்படுத்தினேன். மண்ணெண்ணெய்க்கும் நெருக்கடி வந்ததால், மின்சாரக் குக்கர் ஒன்றை வாங்கினேன். அப்போது திடீர், திடீர் என மின்வெட்டு ஆரம்பித்தது. அடுப்பில் அரிசி போட்ட பிறகு மின் வெட்டப்பட்டால் என்ன செய்வது? ஆகவே வீட்டுக்கு வெளிப்புறத்தோடு, சின்ன ஜெனரேட்டர் ஒன்றை வாங்கிப் பொருத்தினோம் – மின்வெட்டு வந்தால் கைகாவலுக்கு ஜெனரேட்டரைப் பயன்படுத்தி, ஆரம்பித்த சமையலை நடத்தி முடிக்கலாம் என்ற எண்ணத்தில். இப்போது ஒரு புறம் மின் வெட்டு, மறுபுறம் ஜெனரேட்டர் இயக்க எரிபொருளும் இல்லை" – என்று கூறி, ஆட்சியாளரைத் திட்டித் தீர்த்து வைதார் அம்மணி. அவரின் கோபத்தில் நியாயம் இருப்பதாகவே படுகின்றது.

இன்றைய பொருளாதார நெருக்கடியும் அதன் தொடர் விளைவுகளும், சாமனியனின் அடி வயிற்றில் நெருப்பாகக் கனலத் தொடங்கி விட்டது. இனி ஆட்சியாளர்களுக்கு அரசியல் மீட்சியே இல்லை என்றுதான் எனக்குத் தோன்றுகின்றது.

ஏதேனும் அரசியல் அதிசயங்கள் நடந்தாலன்றி, இப்போதைய ஆட்சித் தரப்புக்கு மீண்டும் அரசியல் செல்வாக்குக் கிட்டுவது துர்லபம்தான். பௌத்த – சிங்களப் பேரினவாத வெறியையும், மேலாதிக்கத் திமிரையும் தூண்டி நின்றாலும் கூட மக்கள் செல்வாக்கை மீளச் சம்பாதிப்பது என்பது சாத்தியப்படக் கூடிய விடயமாகத் தோன்றவில்லை.

இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு கொரோனாப் பேரிடர், முன்னைய அரசுகள் வாங்கிக் குவித்த கடன்கள் போன்றவை காரணம் என ஆளும் தரப்பு குறிப்பிட்டாலும் அதை நம்புவதற்கு மக்கள் தயாரில்லை.

முன்னைய மஹிந்தவின் ஆட்சியில் கப்பலே வராத துறைமுகம், விமானங்கள் இறங்காத சர்வதேச விமான நிலையம், விளையாட்டுப் போட்டிகளே நடக்காத விளையாட்டு அரங்கம், முதலீடு வராத துறைமுக நகர், தாமரைத் தடாகக் கலையரங்கம், தாமரைக் கோபுரம் என்று பல்லாயிரம் கோடி டொலர்களை – ரூபாக்களை – ஏப்பமிட்ட மெகா திட்டங்களை கடன் அடிப்படையில் முன்னெடுத்து, கமிஷன் வாங்கி, நாட்டின் கடன் சுமையைக் கூட்டினார்கள். அதன் விளைவைத்தான் நாடு இப்போது சுமக்கின்றது என எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்துகின்றன.

எரிபொருள் மட்டுமல்ல, சிமெந்து முதல் கொண்டு அத்தியாவசியப் பொருள்கள், உணவுப் பொருள்கள், மருந்துப் பொருள்கள் எல்லாவற்றுக்கும் பற்றாக்குறை, தட்டுப்பாடு.

இருக்கும் பொருள்களும், கொள்ளை விலை. கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் பெரும்பாலான பொருள்களின் விலை ஐம்பது வீதத்தால் அதிகரித்துள்ளது. ஆனால் பாமரனின் சம்பளம் மட்டும் கூடவில்லை.

பொருள்களின் விலை உயர்ந்து எகிறிவிட்டது. மறுபுறத்தில் பணத்தின் பெறுமதி நாளொரு வீச்சும் பொழுதொரு சரிவுமாக அதலபாதாளத்தில் வீழ்ந்து கொண்டிருக்கின்றது.

என்ன செய்வது என்று தெரியாமல் பாமரன் துடித்துக் கொண்டிருக்கின்றான்.

கடைகளுக்குப் போய் பழைய விலைகள் பற்றி பேசினால் கடைக்காரர் அது கோ.மு., இது கோ.பி. என்கின்றார்கள்.

அது என்ன கோ.மு., இது என்ன கோ.பி. என்றேன்.

கோட்டாபய ஆட்சிக்கு வரமுன் என்றால் கோமு, கோட்டாபய ஆட்சிக்கு வந்த பின்னர் என்றால் கோபி என்று விளக்கம் தந்தார் கடைக்காரர்.

கோட்டாபயவை ஜனாதிபதியாக்க விழுந்தடித்து வாக்களித்த சுமார் 69 லட்சம் வாக்காளரிடம்தான் இன்றைய நிலைமைக்கு விளக்கம் கேட்க வேண்டும்.

அன்றாடம் காய்ச்சிக் குடும்பங்கள் பலவற்றினதும் நிலைமை அதோ கதிதான் என்றே எனக்குத் தோன்றுகின்றது.

மக்கள் படும் இந்த அவலங்கள் – கஷ்டங்கள் குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகம் அலட்டிக் கொண்டவராகத் தெரியவில்லை.

தமக்கு வாக்களித்த பெரும் வரலாற்றுத் தவறுக்காக அந்த மக்களே பட்டுத் தெளியட்டும் என்று விட்டு விட்டிருகின்றார் போலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

– மின்னல் –

---

## ஐ.நா. ஆணையாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் மற்றும் பொறுப்புக்கூறலில் ஏற்பட்டுள்ள திசைமாறிய பொறிமுறை உட்பட மேலும் சில விடயங்கள் தொடர்பில் இதன்போது பேராயர், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்குத் தெளிவுபடுத்தினார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் இலங்கை அரசின் நீதி விசாரணை மீதான நம்பிக்கை தகர்ந்துவிட்டது எனத் தெரிவித்திருந்த கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, நீதி கோரி சாவதேசத்தை நாடவுள்ளார் எனத் தெரிவித்திருந்தார்.

இதற்காக வத்திக்கான் அனுமதியை நாடிய அவா, வத்திக்கான் சென்று பாப்பரசர் பிரான்சிஸைச் சந்தித்துப் பேசிய பின்னர் ஜெனிவா சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடனான பேராயரின் சந்திப்பு கோட்டாபய அரசுக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

---

## ஜெனிவா அலுவலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தின் பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலக உயர் அதிகாரிகள் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுடனான சந்திப்பை மேற்கொண்டிருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதப்படுகின்றது.

இலங்கை மீதான 46/1 பிரேரணை கொண்டுவரப்பட்டு அதன் மீதான ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் எழுத்துமூல அறிக்கை மார்ச் 3ஆம் திகதி (இன்று) சமர்ப்பிக்கப்பட இருக்கும் வேளையிலே நடந்த இந்தச் சந்திப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இலங்கை சார்பில் வெளிநாட்டமைச்சர் ஜி.எல். பீரிஸ் தலைமையில் ஒரு குழுவினர் ஐ.நாவுக்கு நேரடியாகப் பயணம் செய்திருந்த வேளையில் இலங்கைத் தமிழ் மக்கள் சார்பில் ஐ.நா. உயர் அதிகாரிகளுடன் நடைபெற்ற முக்கிய சந்திப்பு இதுவே ஆகும்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தால் (ரெலோ) ஒருங்கிணைக்கப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.வி.விக்னேஸ்வரன் (தலைவர் – தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி), செல்வம் அடைக்கலநாதன் (தலைவர் – ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (தலைவர் – புளொட்) மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் குருசுவாமி ஆகியோர் கலந்துகொண்டனர். உடல் நிலை காரணமாக தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா இறுதி நேரத்தில் கலந்துகொள்ள முடியவில்லை.

ஆக்கபூர்வமான இந்தச் சந்திப்பு கலந்துரையாடல் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் 15 நிமிடங்கள் வரை நீடித்தது. இதில் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறலுக்கான நீதிப் பொறிமுறை, தண்டனையின்மை நீடிப்பு, காணி அபகரிப்பு, குடிப்பரம்பல் சிதைப்பு, திட்டமிட்ட குடியேற்றங்கள், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அரசியல் கைதிகள் மற்றும் அரசுக்குத் தேவையானவர்களுடைய விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர், அக்குடும்பங்களுக்கான நீதி, காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகச் செயற்பாடுகள் மற்றும் புதிய ஏற்பாட்டில் சாட்சியங்கள், ஆதாரங்களைத் திரட்டுதல் என்பன பற்றி தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளால் ஐ.நா. உயர் அதிகாரிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

அரசு தனது தரப்பில் பலரை ஐ.நா. அமர்வுக்கு அனுப்பி வைத்திருக்கும் இவ்வேளையில் தமிழர் தரப்புப் பிரதிகளை ஐ.நா. அலுவலர்கள் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் வெற்றிகரமாக நடைபெற்றது தமிழர் தரப்பின் மிகவும் முக்கியமான நகர்வாகக் கருதப்படுகின்றது.

மேலும், கடந்த செப்டெம்பர் மாதம் 2020 ஆம் ஆண்டு ஐந்து தமிழ்த் தேசியக் கட்சிகளால் கையொப்பம் இடப்பட்டு அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்ட பல விடயங்கள் இம்முறை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் உள்வாங்கப்பட்டு இருப்பதும் சுட்டிக் காட்டப்பட்டது – என்றார்.

## பட்டமளிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

8 மணிமுதல் மாலை 3 மணிவரை, திருநெல்வேலிச் சந்தியில் இருந்து கொக்குவில் சந்தி நோக்கிய ஆடியபாதம் வீதியூடாகப் பயணம் மேற்கொள்ள முடியும்.

மேலும், கொக்குவில் ரயில் கடவை வரை ஒருவழிப் பாதையாக மாற்றப்படுவதுடன், கொக்குவில் சந்தியில் இருந்து திருநெல்வேலி சந்தி வரை பயணிப்போர், பிறவுண் வீதி மற்றும் இராமநாதன் வீதியூடாகப் பலாலி வீதியைச் சென்றடைய மாற்றுப் பாதையைப் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தியிலிருந்து, கலட்டி சந்தி வரையான போக்குவரத்தும் ஒரு வழிப்பாதையாக மாற்றப்படுகின்றது என நல்லூர் பிரதேச சபை அறிவித்துள்ளது.

Director, Jaffna College Institute of Technology
Calls for the following courses

Civil Draughtperson (one year)
Minimum Qualification Passed G.C.E.(OL) with pass in Mathematics & English
Course leads to:
- Follow courses in level 5
- Register for drawings at local councils

Computer Certificate Courses
(3 - 4 months Part time)
- Certificate in MS OFFICE - (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer - (Page Maker, PhotoShop & CorelDraw)
- Web Designing (HTML, CSS, JAVA Script PHP, MYSQL)
- JAVA, C++ Programming

Foundation in Information Technology
(FIT) (6 months part time)
Pre degree course leads to Bachelor|s in Information Technology (BIT), University of Colombo.

Commencement in the 2nd week of March 2022
The Courses will be conducted at our Jaffna Centre too
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road, Jaffna.
For further details contact
Tel no: 0212250975 0212223382
Email: ejcitsltnet.lk.



யாழ்ப்பாணம் - நல்லூர்- வட்டுக்கோட்டை - சங்கானை - சுன்னாகம் - ஆவரங்கால்- நெல்லியடி - கைதடி - சங்கத்தானை - பளை - கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு - கனகராயன்குளம் - மல்லாவி -மன்னார் - வவுனியா - திருகோணமலை- மூதூர் - கொழும்பு

POST YOUR AD yarlads.com
உங்கள் விளம்பரங்களை இலவசமாகப் பதிவிட


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இனி, இதுதான் நடக்கும்!

மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் நாடு மூழ்கிக் கிடக்கின்றது. நாடும் மக்களும் தலை நிமிர முடியாத அழுத்தத்துக்குள் மாட்டுப்பட்டுள்ளனர்.

புது வருடம் பிறந்து ஓரிரண்டு, மாதங்கள் முடிய மிக மோசமான இக்கட்டு நிலைமை ஏற்படும் என இப்பத்தியிலேயே சுட்டிக்காட்டி வந்தோம். அந்த நெருக்குவாரங்களின் ஆரம்பம்தான் இப்போது. இனித்தான் மிக மிக மோசமான கட்டங்கள் கட்டவிழும்.

நெருக்கடி கழுத்துக்கு வந்துள்ள சூழலில் ஆளும் தரப்பின் பொட்டுக்கேடு வெளிப்படத் தொடங்குகின்றது.

இந்த மோச நிலைக்கு நாம் காரணம் அல்லர் என்று கூறி, தம்மைத் தப்புவித்துக் காப்பாற்ற ஒவ்வொரு தரப்பும் தயாராகின்றமை வெளிப்படை.

அரசின் பங்காளிகளாக இருந்து, கட்டு மட்டில்லாத பலத்தை ஆளும் தலைமைப் பீடத்துக்குப் பெற்றுக் கொடுத்து, நாடு கெட்டுப் போகக் காரணமான அனைத்து அதிகார நடவடிக்கைகளுக்கும் ஒத்தூதிய ஆளும் கூட்டமைப்பின் பதினொரு பங்காளிக் கட்சிகள் இப்போது மெல்லக் கழன்று, ஆளும் தரப்புக்குள் 'தனிக் கோலம்' கொள்கின்றன. அரசு எடுத்த முடிவுகளுக்கும், தீர்மானங்களுக்கும், நடவடிக்கைகளுக்கும் நாங்கள் காரணம் அல்லர் என்று குறிப்பிட்டு, குற்றச்சாட்டு விரலை ஆளும் கூட்டமைப்பின் ஏனையோர் மீது சுமத்தும் போக்கும் அரங்கேறுகின்றது.

நாடு மோசமான இந்த நிலைமையை அடைந்துள்ள சூழலில், அதன் தாக்கம் அந்நிய செலாவணிக் கையிருப்பு முழுமையாகக் கரைந்த விவகாரத்தோடுதான் துலாம்பரமாக வெளிப்பட்டது. அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டமைக்கு மத்திய வங்கியினதும், திறைசேரியினதும் உயர் மட்டங்கள் மேற்கொண்ட நிதிக் கொள்கை தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்களே காரணம் என்று யாவரும் குமுறும் நிலையில், குற்றச்சாட்டைப் பொறுப்பேற்காமல், அதற்கான விரலை வேறு பக்கம் நோக்கி நீட்டுகின்றார் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால்.

ஆறு மாதங்களாக மத்திய வங்கி பரிந்துரைத்த முன்மொழிவுகளை – ஆலோசனைகளை – கவனிக்காமல் அரசாங்கம் கிடப்பில் போட்டதே இந்த நிலைமைக்குக் காரணம் என்று வியாக்கியானம் கூறுகின்றார் அவர்.

அதாவது, இப்படியெல்லாம் நடக்கும், எனவே அவற்றைத் தவிர்க்க இன்ன, இன்ன நடவடிக்கைகளை எல்லாம் எடுங்கள் என நாம் ஆலோசனை கூறினோம், அவற்றை அரசு முன்னெடுத்து நடைமுறைப்படுத்தவில்லை, அதனால்தான் இந்த நிலைமை என்று குற்றச்சாட்டு விரலை அரசுப் பக்கம் நீட்டுகின்றார் அவர்.

இதை அவர் – மத்திய வங்கி ஆளுநர் கப்ரால் – கூறுகின்றமைதான் முக்கியமானது.

சரியாக ஆறு மாதங்கள் முன்னர் வரையில், அரசாங்கத்தின் பொருளாதாரம் தொடர்பான முக்கிய அமைச்சுப் பதவியில் இருந்தவர் அவர். அரசின் பொருளாதாரப் பிரிவில் தீர்மானம் எடுக்கும் முக்கிய பொறுப்பில் தொடர்ந்தும் இருப்பவர். இப்போது இந்தப் பொருளா தார நிலைமைக்கு – நெருக்கடிக்கு – தாம் காரணமல்லர் என்று அரசுப் பக்கம் குற்றவிரலை நீட்டுகின்றார் அவர்.

எரிபொருளை இறக்குவதற்குத் தேவையான டொலரை – அந்நிய செலாவணியை – விடுவிக்கத் தவறிய மத்திய வங்கி மற்றும் திறைசேரி அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொதுப் பாவனைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரட்ணாயக்கா கூறுகின்றார்.

நாடும், மக்களும் பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி, துவண்டு கிடக்கும் இந்த நிலையில் சம்பந்தப்பட்டோர் இப்படி மாறி மாறிக் குற்றச்சாட்டு விரலை நீட்டுவதும், தாங்கள் பொறுப்பில்லை என்று நழுவிக் கொள்ளுவதும்தான் இனித் தாராளமாகத் தொடர்ந்து அரங்கேறும்.

# ஜெனிவா மாநாட்டால் எமக்குப் பாதிப்பில்லை!

## நீதி அமைச்சர் அலி சப்றி நம்பிக்கை



ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு களங்கம் ஏற்படாது எனத் தாம் நம்புகிறோம் என நீதியமைச்சர் அலி சப்றி தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றிடம் பேசிய அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆரம்பத்தில் இருந்தே, குறித்த மாநாடு ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான இராணுவ நிலைமையை மையமாகக் கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், ஜெனிவா மாநாட்டில் இலங்கை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் எதிர்வரும் சனிக்கிழமை கலந்துரையாடப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடுகளுக்கு எதிராக வெளிவிவகார அமைச்சர் உரிய பதிலளிப்பதற்குத் தயார் எனவும் அமைச்சர் தெரிவித்தார். இருப்பினும், இந்த முறைப்பாடுகளின் தன்மையைப் பார்க்கும்போது, அவை எங்களைக் கடுமையாகப் பாதிக்காது. – என்றார்.

ஜெனிவா மாநாட்டு அதிகாரிகள் இலங்கையில் மட்டுமன்றி உலகம் முழுவதிலும் உள்ள நிலைமையை உணர்ந்துள்ளனர். ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான போர்ச் சூழல் இன்று பெரிய தலைப்பாக மாறியிருப்பதே காரணம் என அவர் மேலும் கூறியுள்ளார்.

# எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பை வழங்குக!

## பொலிஸ் மா அதிபர் உத்தரவு



எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்ப நிலைமைகள் ஏற்படக் கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவி வரும் எரிபொருள் தட்டுப்பாட்டு நிலைமையினால் இவ்வாறு குழப்பங்கள் ஏற்படலாம் என சுட்டிக்காட்டியுள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் மக்கள் ஒன்று கூடி கலகங்களில் ஈடுபடக்கூடிய சாத்தியங்களைத் தடுக்கும் நோக்கில் விசேட பாதுகாப்பு முறைமையொன்று அறிமுகம் செய்யப்பட வேண்டுமென பொலிஸ் மா அதிபர் சீ.டி.விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சுற்றுநிருபம் ஒன்றையும் அவர் வெளியிட்டுள்ளார்.

விவசாயத் தேவைகள், விவசாயத்துக்குப் பயன்படுத்தும் உபகரணங்கள், சுற்றுலாத்துறை, அம்புலன்ஸ்கள், தீயணைப்பு வாகனங்கள், நோயாளர்களை போக்குவரத்து செய்யும் ஏனைய வாகனங்கள் போன்றவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கு வாகன நெரிசல் காணப்படும் இடங்களில் கலகங்கள் வெடிக்கக் கூடிய சாத்தியங்களைத் தடுக்க பொலிஸ் உத்தியோகத்தர்களை அந்த இடங்களில் கடமையில் அமர்த்துமாறு பொலிஸ் மா அதிபர், பொலிஸ் நிலையங்களுக்கு அறிவித்துள்ளார்.

# பட்டாசு கொளுத்தி ஆரவாரத்துடன் டீசல் பவுஸரை வரவேற்ற மக்கள்

தங்காலை, மஹாவெல பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் டீசலை ஏற்றிய பவுஸர் வந்த போது, அங்கு காத்திருந்த வாடிக்கையாளர்கள் அமோக வரவேற்பை அளித்துள்ளனர்.

பட்டாசு கொளுத்தியும், கைதட்டியும், ஆரவாரம் செய்தும் மக்கள் டீசல் பவுஸரை வரவேற்றுள்ளனர்.

பெற்றோல் நிலையத்தில் டீசல் பெறுவதற்காக சுமார் 12 மணி நேரம் வரிசையில் நின்றனர் எனச் சிலர் தெரிவித்துள்ளனர்.

# ஓட்டோவுடன் பேக்கரி உணவுகள் தல்கம்பொலவில் தீப்பற்றி எரிந்தது



கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் பேக்கரி உணவுகளை விநியோகித்துக் கொண்டிருந்த ஓட்டோ ஒன்று தீப்பிடித்து எரிந்துள்ளது.

காலி, தல்கம்பொல பிரதேசத்தில் வாகனம் தீப்பிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தீயால் ஓட்டோவின் பின்பகுதி முற்றாக எரிந்து நாசமானதுடன் அதிலிருந்த பேக்கரி உணவுப்பொருள்களும்எரிந்து நாசமாகியுள்ளன.

# “பெண்களால் முடியாததென்று எதுவுமில்லை”

**Fashion Beauty Corner அழகுக்கலை நிறுவனத்தின் உரிமையாளர் ஜெயவானி ஜெகநாதனின் நேர்காணலிது.**



ஜெயவானி ஜெகநாதனின்
உரிமையாளர்
Fashion Beauty Corner
அழகுக்கலை நிறுவனம்

### உங்களைப் பற்றிய அறிமுகம்

என் பெயர் ஜெயவானி ஜெகநாதன். யாழ்ப்பாணத்தின் அரியாலையில் வசிக்கிறேன். நான் Fashion Beauty Corner அழகுக்கலை நிறுவனத்தை நடாத்திவருகிறேன். எனது வேலையை நான் சிறப்பாக செய்ய வேண்டுமென்பதில் எப்போதும் உறுதியாக இருக்கிறேன். அழகுக்கலைத்துறையை மிகவும் ஆழமாக நேசிக்கிறேன். என்னுடைய ஆர்வமும்,தன்னம்பிக்கையும் தான் என்னை அழகுக் கலைத்துறையுலகிற்கு அறிமுகம் செய்தது.

### அழகுக்கலைத் துறையில் எப்படி ஆர்வம் வந்தது?

சிறுவயதிலிருந்தே நாட்டியம், நடனம், நாடகம், அழகுக்கலை என அனைத்து துறைகளிலும் எனக்கு ஆர்வம் அதிகம். எனது அம்மா ஒரு நடனக்கலைஞர். அவருடைய அந்த துறைதான் நான் அழகுக்கலையில் ஈடுபடும் ஆர்வத்தை தூண்டியது. நான் இந்த துறையைத் தேர்ந்தெடுக்க முழுக்க முழுக்க என்னை ஊக்குவித்தது என் பெற்றோர் தான். இதன் மூலம் எனக்குள் இருந்த ஈடுபாடு அதிகரிக்கவே நானே விரும்பி இந்தத்துறையைத் தேர்ந்தெடுத்து ஆர்வத்தோடு கற்க ஆரம்பித்தேன். 1999 ஆம் ஆண்டு அழகுக்கலைத்துறைக் கற்றலை ஆரம்பித்தேன். ஜோரிஸ் சண்முகநாதன் அவர்களிடம் அழகுக்கலைத்துறையை கற்றுக்கொண்டேன். இருந் தாலும் தெரியாதவற்றைத் தேடிப் படிப்பதில் எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. இந்த எண்ணம் தான் Facial மற்றும் மற்ற அழகு ஒப்பணைகளில் கடினமானவற்றை நான் கற்றுக்கொள்ள உதவியாய் அமைந்தது.

புதுபுது விடயங்களைத் தேடிக்கற்பதன் மூலமே ஒரு துறையில் நாம் கொண்ட அறிவை விருத்திசெய்யலாம். நான் அதையே பின்பற்றுகிறேன். இன்றும் நான் அழகுக்கலைத்துறையில் புதுபுது விடயங்களை தேடிக் கற்றுக்கொண்டு என்னை நானே உயர்த்திவருகிறேன்.

### இத்துறையில் நீங்கள் எதிர் நோக்கும் சவால்கள் என்ன?

அழகுக் கலைத்துறையென்பது எனக்கு சவால்கள் நிறைந்த துறைதான். 2014 ஆம் ஆண்டு முதன் முதலில் Fashion Show ஒன்றை ஒழுங்கு செய்தேன். இதன்போதே நான் பல சவால்களை எதிர்கொண்டேன். எதிர்ப்புகளும், எதிர்மறையான கருத்துக்களையும் என்னை பின் வாங்கச்செய்தது. இருப் பினும் இதை எப்படியாவது செய்து முடிக்கவேண்டுமென்ற எண்ணத்தில் யாழ்ப்பாணத்தில் Fashion Show வை ஏற்பாடு செய்து வெற்றிகரமாக நடாத்தி முடித்தேன்.

### அழகுக் கலைத்துறையில் உங்க ளுக்கு கிடைத்த வாய்ப்புகளும் நீங்கள் அடைந்த சாதனைகளையும் பற்றி ஒரு சில..

அழகுக்கலைத்துறையில் எந்தவொரு வாய்ப்பையும் நான் விட்டுவிடுவதில்லை. எனக்கு கிடைக்கும் வாய்ப்புகளில் முழுமையாக என்னை ஈடுபடுத்தி என்னால் முடிந்த விடயங்களை நான் செய்து விடுவேன். அப்படி எழுந்த ஒன்றுதான் நான் புத்தகமெழுத காரணமாயிருந்தது. என் நண்பர்களின் உதவியோடும் ஆதரவோடும் நாம் நடாத்திய Fashion Show இற்கான புத்தகமொன்றை எழுதி வெளியிட்டோம். இதனை தொடர்ந்து பல அழகுக்கலை நிகழ்வுகள் Fashion Show களையும் நடாத்தினேன். எனது சமூகத்தில் Modeling என்றவொரு எண்ணத் தையும் அறிமுகம் செய்து அனைவரினதும் சார்பாக பெரும் ஆதரவைப்பெற்றுக் கொண்டேன். அழகுக் கலைத்துறையில் நான் பெற்ற தேர்ச்சியைக் கொண்டு பல குறுந்திரைப் படங்களுக்கு ஒப்பணை யாளராக இணைந்து கொண்டேன். அத்தோடு அத் திரைப்படங்களின் கதாபாத்திரங்களுக்கான ஆடை வடிவ மைப்புகளையும்மேற்கொண்டிருந்தேன். 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற



‘சிகரம் தொட்ட பெண்கள்” எனும் பெண்களுக்கான கௌரவ விருதுவிழாவில் நானும் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இந்த விருது என்னை மேலும் பலப்படுத்தி என் திறமையை ஊக்குவிப்புச்செய்தது. ஒரு பெண்ணாக நான் சாதிக்கவேண்டுமென்று நினைத்து செயற்பட்டதன் விளைவாகவே எனக்கு இந்த கௌரவம் கிடைத்தது.

### சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு நீங்கள் கூற நினைப்பது.

எம்மாலும் சாதிக்கமுடியுமென்று ஒவ்வொரு பெண்களும் நினைக்கவேண்டும். அப்படி நினைத்ததாலேயே தற்போது இந்த இடத்தில் நான் என்னைப்போன்ற பல பெண்களுக்கு உதாரணமாய் இருக்கிறேன். ஒவ்வொரு பெண்களும் சாதிக்க வேண்டும். பெண்ணாக இருந்தாலும் ஒரு ஆணைப் போல துணிந்து செயற்படவேண்டும். எந்த காலமாக இருந் தாலும் ஒவ்வொரு பெண்களாலும் சாதிக்க முடியும். பெண்களால் முடியாததென்று எதுவுமில்லை.






காலைக்கதிர் Kalaikkathir

# மக்களின் கோரிக்கைகளைப் புரிந்து கொண்டு பயங்கரவாத தடுப்புச்சட்டத்தை நீக்கவேண்டும்!

## மாவை சேனாதிராஜா வலியுறுத்தல்



தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் ஒன்றிணைந்து இந்தப் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்க வலியுறுத்து கிறார்கள். இதனை அரசாங்கம் புரிந்து கொண்டு பயங்கரவாதத் தடுப்புச்சட்டத் திருத்தத்தை உடனடியாக நாடாளுமன் றத்தில் சமர்ப்பித்து அதனை நீக்க வேண் டும் எனக் கோருகின்றோம் என இலங்கைத் தமிழரசுக் கட்சி யின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள் ளார். வவுனியாவில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில் -

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராக நீண்ட காலமாகப் போராட்டங்கள் இடம்பெற்று வந்திருக் கின்றன. பல ஆயிரக் கணக்கானவர்கள் பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக் கப்பட்டுள்ளார்கள். சிலர் விடுதலை செய்யப்பட் டுள்ளார்கள். 400 இற்கும் மேற்பட்டவர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இன்னமும் சிறைகளில் இருக்கின்றனர் எனத் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முயற்சியால் தேசிய அடித் தளத்தில் இருந்து வேலை செய்கின்ற ஏனைய கட்சிகள், தொண் டர்கள், முன்னாள் ஜனாதிபதி, மதத் தலைவர்கள் என பலர் பல மாவட் டங்களில் இந்த பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் எனக் குரல் கொடுத்து அதற்கு எதிரான கடிதத்திலும் கையொப்பமிட் டுள் ளார்கள். அதற்கான வேலைகள் எமது கட்சியினர், கட்சியின் வாலிபர் முன்ன ணியினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இலங் கையில் தற்போதைய ஆட்சியாளர்கள் இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை தங்களுடைய பௌத்த சிங்கள ஆட்சி ஒன்றை உருவாக்கு வதற்குப் பயன் படுத்துவார்கள். இந்த அரசாங்கத்தின் ஜனநாயக விரோத, இனப்பிரச்சினை தீர்க்கப்படாத விடயங்களுக்கு எதிராக நாங்கள் குரல் கொடுக்கின்ற போது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி இந்தப் போராட்டங்களை ஜனநாயக விரோத அடிப்படையில் அடக்கி ஒடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது. பயங்கரவாதத் தடைச்சட்டம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற எமது போராட்டம் மார்ச் மாதம் முழுமையாக நடைபெறும். தமிழ், முஸ் லிம், சிங்கள மக்கள் ஒன்றிணைந்து இந்தச் சட்டத்தை நீக்க வலியுறுத்துகிறார்கள். இதனை அரசாங்கம் புரிந்து கொண்டு பயங்கர வாதத் தடுப்புச்சட்டத் திருத்தத்தை உடன டியாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நீக்க வேண்டும் எனக் கோரு கின்றோம். - எனத் தெரிவித்தார்.

---

# பெலரஸிலுள்ள இலங்கை மாணவர்கள்; தேவையான நடவடிக்கை எடுக்குக!

## பிரதமர் மஹிந்த உத்தரவு



பெலரஸில் உயர் கல்வியில் ஈடுபடும் இலங்கை மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாகத் தேவை யான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மாணவர்களின் பாதுகாப்பிற் கான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் ரஷ்யாவிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்குப் பிரத மர் பணிப்புரை விடுத்துள்ளார்.

பெலரஸில் உள்ள பல் கலைக்கழகங்களில் கல்வி பயி லும் சுமார் 1,500 இலங்கை மாண வர்களின் பெற்றோர்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேற்படி இலங்கை மாண வர்கள் ரஷ்யா அல்லது இலங்கை செல்வதற்கு விசா வழங்குமாறும் பிரதமர் அறிவுறுத்தல் வழங்கி யுள்ளார்.

மேலும் கல்வி நடவடிக்கை களைப் பல வாரங்களுக்கு ஒத்தி வைப்பது தொடர்பாகப் பல்கலைக் கழக அதிகாரிகளுடன் கலந்து ரையாடல்களை முன்னெடுக்குமா றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

---

# வவுனியா தனியார் பஸ் உரிமையாளர் சங்க ஊடக சந்திப்புக்குப் பொலிஸாரால் இடையூறு!



வவுனியா தனியார் பஸ் உரிமை யாளர் சங்கத்தின் ஊடக சந்திப்புக்கு பொலிஸார் இடையூறை ஏற்படுத் தியுள்ளனர்.

தனியார் பஸ்களுக்கு எரி பொருள் பிரச்சினை தொடர்பில் தனியார் பஸ் உரிமையாளர் சங்க தலைவரால் வவுனியா புதிய பஸ் நிலையத்தில் தனியார் பஸ் பதிவுக் காக ஒதுக்கப்பட்ட இடத்தில் செவ் வாய்க்கிழமை ஊடக சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அங்கு ஊடகவியலாளர்கள் சென்று ஊடக சந்திப்பை பதிவு செய்யத் தயாராகிய போது பொலி ஸார் அங்கு நடத்த முடியாது எனத் தெரிவித்தனர். பின்னர் தனியார் பஸ் உரிமையாளர் சங்க தலை வரை அழைத்து விவரங்களைப் பெற்றமையுடன், ஊடகவியலா ளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் பணியாற்றும் ஊடக நிறுவ னங்களின் விவரங்களையும் பொலிஸார் கோரினர்.

இதனபோது, நாம் ஏன் எமது விவரத்தை பதிவு செய்ய வேண்டும் என ஊடகவியலாளர்கள் கோரியமையுடன் விவரத்தைக் கொடுக்க மறுத்தனர். இதன்பின் அமைதியாக நின்ற பொலிஸார் ஊடக சந்திப்பு நடைபெற்ற போது அதனை முழுமையாகக் கண் காணித்து இருந்தமையும் குறிப் பிடத்தக்கது.

---

# சாப்பிட இல்லாத மக்கள் என யாரும் இங்கு இல்லையாம்!

## அமைச்சர் ஜோன்ஸ்டன் கூறுகிறார்



சாப்பிட இல்லாத மக்கள் என யாரும் இந்த நாட்டில் இல்லை என்று அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித் துள்ளார்.

கொழும்பு - ஹொரண வீதியின் 120 இலக்க பஸ் மார்க்கத்தை விரிவுபடுத்தும் போது வீடுகளை இழந்தவர்களுக்கு, புதிய வீடுகளுக்கான திறப்புகளை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியி டும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

ஒன்றரை வருடம் வீடுகளில் அடைபட்டி ருந்தமையை மக்கள் அறிவார்கள். அந்தக் காலத்தில் செய்ய முடியாது போனதை தற் போது செய்ய முயற்சிக்கிறார்கள்.

நாட்டின் பொருளாதாரத்தையும் தமது பொருளாதாரத்தையும் மக்களின் முழு சக்தி யையும் செலுத்தி மக்கள் பெரும் அர்ப்பணிப் பைச் செய்கிறார்கள்.

நாட்டில் சீமெந்து பிரச்சினை இருப்பதை ஏற்க வேண்டும். ஆனால், யுகத்தின் பின்னர் அதிக அபிவிருத்தி நடைபெறுவது இந்த யுகத்தில் தான். மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின் பின்னர் அதிகமான வீதிகள் கோட்டாபய ஆட்சியிலேயே நிர்மாணிக்கப்படுகின்றன.


தனியார் துறையினர் அதிக கட்டு மானத்தை முன்னெடுத்தமை மஹிந்த ஆட்சியில் தான். அதைவிட அதிகமாக தற்போது கோட்டாபய ஆட்சியில் நடக்கிறது.

வீதிகளை மேம்படுத்தும் போது அவர்களின் காலத்தில் செய்ய முடியாமல் போனதையிட்டு அவர்களுக்கு கவலை ஏற்படுகிறது. இதுதான் உண்மை நிலை. - எனக் குறிப்பிட்டுள்ளார்.

---

# ஜனாதிபதியின் தோற்றுப்போன மனநிலையை நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு காட்டுகிறது!

## சிறிதரன் எம்.பி. விசனம்



நாட்டில் காணப்படும் எரிபொருள் தட்டுப்பாடு என்பது ஜனாதிபதியின் தோற்றுப்போன மனநிலையை உலகிற்கு காட்டி நிற்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குற்றம் சாட்டி யுள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், இந்த அரசாங்கம் தோல்வியடைந்து விட்டது என்றும் தெரிவித்தார்.

விவசாயத்தை தமது ஜீவனோபாயமா கக் கொண்டு வாழ்ந்துவரும் மக்கள், இயற்கை விவசாயம் என்ற அரசாங்கத் தின் கொள்கையால் பின்னடைவைச் சந் தித்துள்ளனர் எனக் கூறினார்.

இருப்பினும் விவசாயத்திற்கு உரத்தை இறக்குமதி செய்வதாக அரசாங்கம் கூறி னாலும் தமிழ் மக்கள் அதனைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றனர்.

மேலும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் உதவியை நாடப்போவ தில்லை எனக் கூறியவர்கள் இப்போது அவர்களிடம் செல்ல முடிவெடுத்திருக் கின்றமை அவர்களது இயலாமையை வெளிக்கொண்டு வந்துள்ளது.

பொருளாதார ரீதியில் பெரும் பின்ன டைவை நாடும் மக்களும் சந்தித்திருக்கின்ற இந்த நேரத்தில், உரிய நடவடிக்கையை எடுக்க அரசாங்கம் வழியமைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை அங்கீகரிக்கும் செயற்பாடு பின்னடைவு!

## மனித உரிமைகள் அலுவலக பேச்சளார் சுட்டிக்காட்டு



பொறுப்புக்கூறலை உறுதிசெய்வது மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை அங்கீகரிக்கும் செயற்பாடுகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்தின் ஊடகப்பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக பெண்களால் பிரதிநிதித்துவப்படுத்தும் காணாமல் போனோரின் குடும்பங்கள் முகங்கொடுத்திருக்கும் பாதுகாப்பற்ற நிலை தொடர்பாகவும் தாம் அறிந்துள்ளோம் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே ஊடகப் பேச்சாளர் ரவினா ஷம்தாசனி இதனை தெரிவித்துள்ளார். அத்தோடு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் இராணுவ மயமாக்கல், இன- மத ரீதியான தேசியவாதம், சிறுபான்மையினர் மத்தியில் அதிகரித்துள்ள பதற்றம் உள்ளிட்டவற்றையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேலோங்கியிருக்கும் சிவில் சமூக அமைப்புக்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மீதான பாதுகாப்புத் தரப்பினரின் தொடர் கண்காணிப்பு மற்றும் மீறல்கள் பற்றியும் அவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களில் 80 பேருக்கும் மேற்பட்டோர் கடந்த வருடம் ஜூன் மாதத்திலிருந்து விடுவிக்கப்பட்டமையை வரவேற்றுள்ள அவர், அதன் பிர யோகத்தை இடைநிறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

## மின்சார சபைக்கான எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டது!

எரிசக்தி அமைச்சால் இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்படும் எரிபொருள் விநியோகம் சில மணி நேரங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் இலங்கை மின்சார சபை பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் அன்ட்ரூ நவமுனி தெரிவித்துள்ளார்.

ஒருவரத்துக்கான எரிபொருளை எரிசக்தி அமைச்சு முன்னர் வழங்கிவந்த நிலையில் தற்போது நாளாந்த அடிப்படையிலேயே கிடைப்பதாக அவர் கூறினார்.

இவ்வாறான நிலையில் எரிபொருள் விநியோகம் தற்போது சில மணிநேரங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பல மின் உற்பத்தி நிலையங்கள் மூடப்பட்டுள்ளன என இலங்கை மின்சாரசபை சுட்டிக்காட்டியுள்ளது.

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராக கையெழுத்திடும் இளைஞர்கள் அச்சுறுத்தல்!

### செயற்பாடுகளில் அரசு என சாணக்கியன் சாடல்



பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராக கையெழுத்திடும் இளைஞர்களை அச்சுறுத்தும் செயற்பாடுகளை அரசாங்கம்முன்னெடுத்துள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிக்குடியில் இடம்பெற்ற பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்து பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## செல்வந்தர்களுக்கு அரசு வழங்கிய வரிச்சலுகையாலே டொலர் தட்டுப்பாடு!

### சஜித் சாடல்



நாட்டில் நிலவும் உண்மை நிலையை பொதுமக்கள் நன்கு உணர்ந்துள்ளனர் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் செல்வந்தர்களுக்கு வரிச்சலுகை வழங்கியதன் காரணமாக அரச வருமானம் குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுவே தற்போதைய டொலர் தட்டுப்பாட்டுக்கு முக்கிய காரணம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டினார்.

அதிகாரிகளின் உதவியுடன் சிலர் பாதுகாக்கப்பட்ட காணிகளை சுவீகரிக்க முயற்சிக்கின்றனர் எனவும் வனப் பகுதிகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதுபோன்ற சட்டவிரோத செயல்களை ஒருபோதும் அனுமதிக்கவோ அல்லது மன்னிக்கவோ மாட்டோம் என்றும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

## அனைத்துப் பிரச்சினைக்கும் இரு மாதத்துக்குள் தீர்வாம்!

### அமைச்சர் பிரசன்ன நம்பிக்கை

நாட்டின் நடைமுறையில் உள்ள பிரச்சினைகளுக்கு இன்னும் இருமாத காலத்திற்குள் தீர்வு கிடைக்கும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

மீரிகம பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், கொரோனாத் தாக்கத்தால் ஏற்பட்ட இந்த விளைவுகள் இலங்கைக்கு மட்டுமானது அல்ல என்றும் கூறினார்.

தேசிய பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பில் இருந்து மீள்வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்

## லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதில் சிக்கல்!

கொழும்பிற்கு வெளியில் மொத்தமாக விற்பனைக்கு கொண்டு வரப்படும் லொத்தர் சீட்டுக்களில் கணிசமான தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை லொத்தர் விநியோ கஸ்தர்கள் சங்கத்தின் தலைவர் கிரிஷான் மரம்பகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அதிகாரிகளிடம் வினவியபோது, லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்குத் தேவையான காகிதத் தட்டுப்பாடு காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தார்கள் என கிருஷான் மரம்பகே குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக லொத்தர் விநியோகஸ்தர்கள் வாடிக்கையாளர்களுக்குத் தேவைக்கு ஏற்ப லொத்தர்களை வழங்குவதில் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளனர் எனவும், லொத்தர் விநியோகஸ்தர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினை தொடர்பில் அரசாங்கம் கவனம்செலுத்த வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

லொத்தர் வியாபாரிகளின் பல பிரச்சினைகளை லொத்தர் கொள்வனவு செய்பவர்கள் தமது பணியை நியாயமான முறையில் செய்யக்கூடிய வகையில் லொத்தர் விநியோகஸ்தர்கள் பெறும் தரகு பணத்தை மேலும் அதிகரிக்கு மாறு நிதியமைச்சிடம் கேட்டுக் கொள்கிறேன் என அவர் தெரிவித்தார்.

## உக்ரைன் - ரஷ்ய யுத்தத்தால் நாடுகள் மந்தநிலை அடைவு!

### ஒளியாமல் முகம்கொடுக்க அரசை கோருகின்றது ஐ.தே.க.



ரஷ்யா - உக்ரைன் போரால் முழு உலகமும் தற்போது மந்தநிலைக்குத் தள்ளப்பட்டுள்ள நிலையில் இலங்கையும் அவ்வாறானதொரு சூழலை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

இந்த நிலைமையை நோக்கி அரசாங்கம் கண்ணை மூடிக் கொள்ளாமல், வரக்கூடிய முடிவுகளுக்கு முகங்கொடுக்க நாட்டைத் தயார்ப்படுத்த வேண்டும் என்றும் அக்கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன வலியுறுத்தினார்.

2014 இற்குப் பின்னர் கச்சா எண்ணெய் ஒன்றின் விலை 100 டொலர்களைத் தாண்டியுள்ளது என்றும் இது இந்த ஆண்டு மார்ச் நடுப்பகுதியில் 120 டொலர்களை எட்டும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

பல நாடுகள் மந்தநிலைக்கு தங்களை தயார்ப்படுத்திக் கொள்ளும் நிலையில் இலங்கையில் இருந்து அத்தகைய தயார்நிலையை எதிர்பார்க்க முடியாது என ருவான் விஜேவர்தன குற்றம் சாட்டினார்.

## இந்தியா விரும்புவதை நிறைவேற்றுபவர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளனர்

### கஜேந்திரகுமார் எம்.பி. சாட்டை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியா விரும்புவதை நிறைவேற்றுபவர்களாகவே உள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

வவுனியா கனகராஜன்குளத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு எதிராக கையெழுத்திடும் நடவடிக்கைக்கு வடக்கு, கிழக்கிற்கு வெளியேயும் ஆதரவு!

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராக கையெழுத்திடும் நடவடிக்கைக்கு வடக்கு, கிழக்கிற்கு வெளியே உள்ள மக்களும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிக்குடியில் இடம் பெற்ற பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்து பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தேசிய சிறுநீரக வைத்தியசாலை வெள்ளை யானையாக மாற்றம்!

## கவலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி





பொலன்னறுவையில் 100 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தேசிய சிறுநீரக விசேட வைத்தியசாலை நோயாளர்களுக்கு உகந்த சேவையை வழங்கத் தவறியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வார இறுதியில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொலன்னறுவை மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

'இந்த வைத்தியசாலையின் பெறுமதி இன்று மக்களுக்கு வழங்கப்படவில்லை. இந்த வைத்தியசாலை வெள்ளை யானையாக இருப்பதைத் தவிர வேறெதுவும் செய்வதில்லை என்ற பேச்சு அடிபடுகின்றது. அது உண்மை. இன்று இந்த வைத்தியசாலையில் ஒரே நேரத்தில் சிகிச்சை அளிக்கக்கூடிய 100 இரத்த சுத்திகரிப்பு கருவிகள் உள்ளன. இது 22 நோயாளிகளுக்கு மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றது.

நாடளாவிய ரீதியில் சிறுநீரக நோயாளர்களுக்கான வைத்தியசாலையின் தற்போதைய நிலை தொடர்பாக முன்னாள் சுகாதார அமைச்சர் மற்றும் தற்போதைய சுகாதார அமைச்சர் ஆகியோரிடம் கலந்துரையாடினாலும் பலனில்லை.

நான் எனது நிலையிலிருந்து இறங்கி இந்த வைத்தியசாலை சார்பாக அனைவரிடமும் பேசினேன். ஆனால் இன்று இந்த வைத்தியசாலை சரியாக இயங்கவில்லை.

உயர்தொழில்நுட்ப உபகரணங்கள் அழிந்து வருகின்றன. சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் பேசினேன். பவித்ராவிடம் பேசினேன். அது எதுவும் பலனளிக்கவில்லை. வைத்தியசாலை செயலிழந்து வருகிறது.

வைத்தியசாலையின் உயர் தொழில்நுட்ப உபகரணங்களுக்கு நேர்ந்த கதி தொடர்பாகவும் முன்னாள் ஜனாதிபதி விளக்கமளித்துள்ளார். இன்னும் சில நாள்களில் உயர்தொழில்நுட்ப கருவிகள் பயன்படுத்தப்படாமல் அழிந்துவிடும். முழு இலங்கையிலும் சிறுநீரக நோயாளர்களுக்கான ஒரேயொரு வைத்தியசாலை இதுவாகும்.

நோயாளிகள் வெகு தொலைவில் இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு சேவையை வழங்குங்கள். சிரி இயந்திரம் இன்று சரியாக இயங்கவில்லை, நான் சத்தமிட்டு அதனைச் சரி செய்தேன். அது இருபத்தி இரண்டு கோடி பெறுமதியானது. வீணாக சிதைகிறது.


ஹிமைற்படி வைத்தியசாலைக்கு பணிப்பாளர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என குற்றம் சுமத்தியுள்ள முன்னாள் ஜனாதிபதி, இது தொடர்பில் பிரதேச மக்கள் பிரதிநிதிகள் கவனம் செலுத்த வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொலன்னறுவையில் 1200 கோடி ரூபா செலவில் 16 ஏக்கர் நிலப்பரப்பில் 30 மாத காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட, தேசிய சிறுநீரக விசேட வைத்தியசாலையை 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11ஆம் திகதி திறந்து வைத்தார். மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த காலத்தில் வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொலன்னறுவை மாவட்ட மாநாட்டில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி, பொலன்னறுவை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய மூன்று மக்கள் பிரதிநிதிகளும் மக்கள் பிரச்சினைகளைப் பேசுபவர்கள் அல்லர் எனக் குற்றம் சுமத்தியுள்ளார்.

விவசாயிகள் பிரச்சினையை நான் எங்கெல்லாம் பேச முடியுமோ அப்போதெல்லாம் பேசுவேன். என்னைத் தவிர பொலன்னறுவையில் இருந்து நாடாளுமன்றம் சென்ற மூன்று உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் யாரும் விவசாயிகள் பிரச்சினை தொடர்பில் பேசுபவர்களல்லர். அனைத்துக்கும் 'இயஸ் சேர்' என காலத்தை வீணடிக்கின்றனர். நாடு இன்று சோகத்தில் உள்ளது. எங்கும் ஒரு மனக்குறை உள்ளது. மக்கள் வாழ்க்கை சீரழிந்துள்ளது. வறுமை தலைவிரித்தாடுகிறது. மக்களின்அன்றாடவாழ்க்கைசீரழிந்துள்ளது. – என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார்.

# வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி நிகழ்வுகளுக்குத் தடை உத்தரவு





இம்முறையும் வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி நிகழ்வை நடத்த முடியாமை கவலை அளிப்பதாக ஆலயத்தின் பூசகர் தம்பிராசா மதிமுகராசா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகள் தொல்பொருள் திணைக்களத்துக்குக் கீழ் உள்ளதாக தெரிவித்து, அந்தத் திணைக்களம் மற்றும் பொலிஸாரால் வவுனியா நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு இடம்பெற்று வருகின்றது.

அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கும் பல்வேறு தடைகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இந்த நிலையில் மேற்படி தடைகளால் கடந்த வருடத்தை போலவே இம்முறையும் சிவராத்தி நிகழ்வை நடத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை சிவராத்திரி தினமானது செவ்வாய்க்கிழமை காலை முதல் ஆலய வளாக பகுதியில் இராணுவத்தினர், பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு மத்தியிலும் பொதுமக்கள் சிலர் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டனர். ஒவ்வொரு வருடமும் சிறப்பான முறையில்மகாசிவராத்திரி நிகழ்வை நாம் அனுஷ்டித்து வந்தோம். எனினும் கடந்த இரு வருடங்களாக அந்தப் பாக்கியம் எமக்குக் கிடைக்கவில்லை.

இந்துசமயத்தின்முழுமுதற்கடவுளானசிவனின் முக்கிய விரதத்தைக் கூட அனுஷ்டிக்க முடியாத அவல நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. எமது வழிபடுவதற்கான சுதந்திரம் தடுக்கப் பட்டுள்ளது. எனவே, எமது ஆலயத்துக்கு சென்று பூசை வழிபாடுகளில் ஈடுபடுகின்றமையுடன் எமது மத சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கு உரிய தரப்புக்கள் அனுமதியை வழங்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

# மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு விசேட திட்டத்தில் எரிபொருள்கள்

## மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவிப்பு

மன்னார் மாவட்டத்தில் தற்போது பெரும்போக நெற்செய்கை அறுவடை இடம்பெற்று வருகின்ற நிலையில் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி டீசல் மற்றும் ஏனைய எரிபொருள்களை கான்களில் பெற்றுக்கொண்டு வெளியில் அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் –

மன்னார் மாவட்டத்தில் தற்போது பெரும்போக நெற்செய்கை அறுவடை இடம்பெற்று வருகின்ற நிலையில் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி டீசலை கான்களில் பெற்றுக்கொண்டு வெளியில் கொண்டு சென்று 135 ரூபாவிற்கு மேல் விற்பனை செய்வதாக எமக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்த நிலையில் தற்போது நெல் அறுவடை செய்பவர்களுக்கு என மன்னார் மாவட்டத்தில் எரிபொருளை வழங்க விசேட நடைமுறை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசங்களில் விவசாயிகள் பெரும் போக நெல் செய்கை அறுவடையை மேற்கொள்ள இருக்கும் விவசாய செய்கையின் ஏக்கர் அளவைக் குறித்த பகுதிக்கான கமவிதானை, விவசாய அமைப்பின் தலைவர், அல்லது செயலாளர் உறுதிப்படுத்தி வழங்குவதன் ஊடாக நெல் அறுவடையை மேற்கொள்ள உள்ள விவசாயிகள் தமக்குத் தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த விடயம் தொடர்பில் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் உரிய அமைப்புக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

எனவே மக்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள நிலையைக் கருத்தில் கொண்டு ஏற்கனவே நெல் அறுவடையை மேற்கொண்ட மன்னார் மாவட்ட விவசாயிகள் மீண்டும் எரிபொருள்களைக் கொள்வனவு செய்து சேமிக்காது, இந்தச் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## துப்பாக்கி வாங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
உக்ரைன்மக்கள்வாங்கிச்செல்கின்றனர்.

உக்ரைன் மீது 7ஆவது நாளாக ரஷ்யப் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. தலைநகர் கீவ், கார்கிவ் போன்ற முக்கிய நகரங்களை குறிவைத்து ரஷ்ய ராணுவம் குண்டுமழைகளைப் பொழிந்து வருகின்றது. ரஷ்ய இராணுவத்தினரின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில், உக்ரைன் இராணுவத்தின் பலம் மிகக் குறைவாக உள்ளது.

இதனால் தங்கள் நாட்டு மக்களை ரஷ்ய இராணுவத்தினருடன் போரிடுமாறு உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் செலன்ஸ்கி அழைப்பு விடுத்திருந்தார். இதனை ஏற்று, ஆயிரக்கணக்கான மக்கள் துப்பாக்கி ஏந்தி ரஷ்யப் படையினருடன் சண்டையிட்டு வருகின்றனர்.

இந்நிலையில், உக்ரைனில் உள்ள முக்கிய நகரங்களான கீவ், கார்கிவ், ல்வைவ் ஆகியவற்றில் உள்ள ஆயுதங்கள் விற்பனை மையங்களில் நீண்ட வரிசைகளில் காத்திருந்து மக்கள் துப்பாக்கி, ராக்கெட் லாஞ்சர் உள்ளிட்ட ஆயுதங்களை வாங்கிச் செல்கின்றனர். சாதாரண ரக துப்பாக்கி முதல் நவீன ரக இயந்திரத் துப்பாக்கிகள் வரை இந்த மையங்களில் விற்கப்படுகின்றன. அதன் தரத்துக்கேற்ப அவற்றுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன.

இது குறித்து கார்கிவில் வெப் டிசைனராகப் பணியாற்றும் இளைஞர் ஒருவர் கூறும்போது, உக்ரைனுக்கு உறுதுணையாக எந்த நாடும் நிற்கவில்லை. ரஷ்யப் படையினரின் தாக்குதல் நாளுக்கு நாள் தீவிரமாகிக் கொண்டே செல்கின்றது. இப்போது நாங்களும் உயிருக்குப் பயந்து ஓடினால், எங்கள் நாட்டை ரஷ்யா கைப்பற்றிவிடும். அது ஒருபோதும் நடக்கக் கூடாது. அதனால்தான், நாங்கள் ஆயுதங்களை ஏந்திப் போரிட்டு வருகின்றோம் – என்றார்.

- - - - - - - - - - - - - - - -

## யாழ்.பல்கலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இன்றைய அமர்வுகளில் பட்டம் பெறும் பட்டதாரிகளின் விவரம் வருமாறு:-

**அமர்வு 1**

கலாநிதி – 01, மொழியியலில் முதுதத்துவமாணி – 01, கணக்கீட்டில் முதுதத்துவமாணி – 01, சைவ சித்தாந்தத்தில் முதுகலை மாணி – 31, மருத்துவமாணி சத்திரசிகிச்சை மாணி – 131, விவசாயத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு) – 65, பொறியியல் விஞ்ஞான மாணி (சிறப்பு) – 55, சட்டமாணி 52

**அமர்வு 2**

புவியியலில் முதுதத்துவமாணி – 02, கல்வியியல் முதுதத்துவமாணி – 01, முதுவியாபார நிர்வாகமாணி – 47,கலைமாணி (சிறப்பு) – 189, சித்தவைத்திய சத்திரசிகிச்சைமாணி – 38, தாதியியலில் விஞ்ஞான மாணி (சிறப்பு) – 24, மருந்தகவியலில் விஞ்ஞானமாணி (சிறப்பு) – 15, மருத்துவ ஆய்வுகூடவியலில் விஞ்ஞான மாணி (சிறப்பு) – 18.

**அமர்வு 3**

கலாநிதி – 01, சித்தவைத்தியத்தில் முதுதத்துவமாணி – 01, மெய்யியலில் முதுதத்துவமாணி – 01, சூழல்முகாமைத்துவத்தில் முது விஞ்ஞானமாணி – 14, கலைமாணி (சிறப்பு) – 132, கலைமாணி (பொது) – 05, விஞ்ஞானமாணி (பொது) – 174.

- - - - - - - - - - - - - - - -

## அரசியல் நோக்கத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அரசியல் நோக்கத்துக்காகக் கையெழுத்துப் போராட்டமாக ஆரம்பித்துள்ளார்களா என்ற சந்தேகம் எழுகின்றது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் கேள்வி எழுப்பினார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் அதனை நீக்குமாறு ஏற்கனவே ஐ.நாவிடம் நாம் கோரிக்கை முன்வைத்துள்ளோம்.

தற்போது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்துப் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் இது அரசியல் நோக்கத்துக்காகச் செய்யப்படுகின்றதா என்ற கேள்வி பலருக்கு எழுகின்றது.

ஏனெனில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் நல்லாட்சி அரசில் சபாநாயகராக இருந்த கரு ஜயசூரிய மற்றும் முஸ்லிம் தரப்புகளும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிரான கையெழுத்துப் போராட்டத்தில் பங்குபற்றி கையெழுத்திட்டிருந்தனர்.

சந்திரிகா ஜனாதிபதியாக இருந்தபோது பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பிரயோகிக்கப்பட்டது. அப்போது அவருக்கு இது பாரதூரமான சட்டமாகத் தெரியவில்லையா?

நல்லாட்சி அரசில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் பலர் கைதுசெய்யப்பட்டார்கள். அப்போது சபாநாயகராக இருந்த கரு ஜயசூரியவுக்குப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பாரதூரமான சட்டமாகத் தெரியவில்லையா?

கடந்த காலங்களில் முஸ்லிம் தரப்பினர், தமிழ் மக்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறையில் வாடும்போது அவர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பதற்கு ஏன் முன்வரவில்லை?

இப்போது இவர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குமாறு கூறுவது ஆட்சி அதிகாரம் தங்களிடம் இல்லை; தங்களின் சுதந்திரம் பறிபோய் விடும் என்பதற்காகவே கையெழுத்துப் போராட்டத்தை நடத்துகின்றனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி ஏற்கனவே நாம் போராடி வருகின்ற நிலையில் சில தரப்பினர் தமது அரசியல் தேவைகளுக்காகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குமாறு கோரி கையெழுத்துப் போராட்டத்தை நடத்துவது வேடிக்கையாக உள்ளது.

முஸ்லில்கள் தற்போதைய அரசில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பலர் கைதுசெய்யப்பட நிலையில் இப்போதுதான் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என அவர்களும் உணர்கின்றார்கள்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தால் போரில் ஈடுபட்டவர்கள் அதிகம் பாதிக்கப்படாத நிலையில் சாதாரண மக்களே குறித்த சட்டத்தால் பல காலமாக சிறைகளில் வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்றுமுழுதாக நீக்கப்பட வேண்டும் என்பது தமிழ் மக்கள் அனைவரினதும் எதிர்பார்ப்பாகும் – என்றார்.

- - - - - - - - - - - - - - - -

## வாள்வெட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தாக்குதலில்ஒருவர்காயமடைந்துள்ளார்.

தாக்குதல் நடத்த வந்த வாள்வெட்டுக் கும்பலில் ஒருவரை வீட்டார் மடக்கிப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

திருச்சபை வீதி, நவாலி வடக்கு பகுதியிலுள்ள வீடொன்றினுள், நேற்று அதிகாலை 3.20 மணியளவில் அத்துமீறி நுழைந்த வாள்வெட்டுக் குழு ஒன்று, வீட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பட்டாரக வாகனத்தின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தியது. அத்துடன், வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொருக்கி, வீட்டிலிருந்த இளைஞரின் மீது தாக்குதல் நடத்த முற்பட்டவேளை இளைஞர் தப்பித்த நிலையில் குறித்த இளைஞரின் தந்தையான நடராசா அருள் றொபின்சன் (வயது 48) என்பவர் வாள்வெட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

இதையடுத்து அயலவரின் உதவியுடன் வாள்வெட்டுக் கும்பலில் ஒருவர் மடக்கிப்பிடிக்கப்பட்ட நிலையில் குறித்த நபரிடம் இருந்து வாள் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட நபர் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சந்தேகநபரை மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## 600 பொருள்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இந்த விடயத்தை திறைசேரியின் செயலாளர் உறுதிப்படுத்தியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டுக்கு அவசியமான விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்பட வேண்டும் என்றும், அத்தியாவசியமற்ற பொருள்களின் இறக்குமதியால் பாரிய சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

அந்நியச் செலாவணி குறைவடையுமாயின், தற்போது கையிருப்பில் உள்ளதை ஔடத இறக்குமதிக்கு ஒதுக்கிட முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் வலுசக்தி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.


விளம்பரத் தொடர்புகளுக்கு –
மின்னஞ்சல் –
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் –
076 443 8622


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்

மலர்வு – 01 – 04 – 1939



உதிர்வு – 02 – 02 – 2022

### அமரர் மகாலிங்கம் செல்லப்பாக்கியம்

(வயது 82)

யாழ்ப்பாணம், வடமராட்சி கம்பர்மலையை பிறப்பிடமாகவும் மயிலியதனை கொம்மந்தறை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட அமரர் மகாலிங்கம் செல்லப் பாக்கியம் அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி.

எங்கள் வீட்டு மணிதீபம்
ஆசையாய் தூளிகட்டி அழகாய்
பாட்டு இசைத்து நேசம் வளர்த்த எம் அம்மா
நீயாய் ஏசினாலும் பாசம் இருப்பவளே
பெற்றெடுத்த தாய் அவரே
காசைத்தான் பார்ப்பதில்லை
கண்களிலே கருணை தானே
வேசமும் தெரியாத வெள்ளந்தி
உள்ளம்தனில் வெளுத்ததெல்லாம்
பால் என்பாள் பெற்றெடுத்த தாய் அவளே
அழுகின்ற குழந்தை அதற்கான தேவையை
அழகாய் புரிந்தவளே
உயிர் மூச்சான அம்மா எல்லை இல்லா அன்பிற்கு
நீங்கள்தான் வரையறை அம்மா...
கல்லறையில் வைக்கவில்லை எங்கள் இதய அறையில்
புதைத்துக் கொண்டோம் நினைவாய் இருப்பதற்கு அம்மா

அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு அவரது ‘செல்வ பவனம்’ இல்லத்துக்கு வருகை தந்து, எம் பெரும் துயரில் பங்கெடுத்தவர்களுக்கும் தொலைபேசி ஊடாகவும் சமூக வலைத்தளங்கள் மற்றும் RIP Book ஊடாகவும் தங்கள் கண்ணீர் அஞ்சலிகளை கவிதைகளாக எழுத்துக்களில் பதிவு செய்து எமக்கு ஆறுதல்கள், அனுதாபங்கள் தெரிவித்த அனைவருக்கும், மற்றும் அன்னாரின் இறுதி அஞ்சலி நல்லடக்கத்திலும் கலந்து கொண்டு மலர் வளையம், மலர் மாலைகள் வைத்து அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்று வரை சகல உதவிகளையும் செய்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக இதயம் நிறைந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம்.

— குடும்பத்தினர்—



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -


## அங்கம் - 297

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

### 747.சமாதியைத் தவிர சிவகுமாரனுக்கு சிலையும் உரும்பிராயில் வைக்கப்பட்டதல்லவா?

சிலை ஒன்று வைக்கப்பட வேண்டும் என இளைஞர்கள் தமிழரசுக் கட்சியினரை – முக்கியமாக அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் போன்ற எம்.பிக்களை வற்புறுத்தினார்கள். சிவகுமாரனது தலைமறைவு காலம் போல இதுவும் அகிம்சைவாதிகளுக்கு சங்கடம் தந்தது. ஆகவே வழமை போல நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேற்பிள்ளையின் தலைமையில் ஒரு குழுவை அமைத்து பணம் சேர்ப்பதற்கான முஸ்தீபுகள் எடுத்தார்கள். இந்தச் சிலை அமைப்புக் குழுவுக்குள் சேகரும் உள்வாங்கப்பட்டார். ஆனால் ஆறு மாதங்களுக்கு மேலாகியும் எந்த வித பணமும் வந்து சேரவில்லை என சேகர் இளைஞர்களுக்குத் தெரிவித்து, இவர்களை நம்பிப் பயனில்லை, நீங்களாகவே ஏதும் செய்யுங்கள் என்று சொன்னதில், அவர்கள் சிவகுமாரனின் படம் பதித்த தபால் உறையினை அச்சிட்டு அதனைப் பள்ளிக்கூடங்கள் எல்லாவற்றிலும் மாணவர்களிடையே ஒரு ரூபாவிற்கு விற்று அதில் வந்த பணத்தில் சிலைக்கான ஏற்பாடுகளைச் செய்தனர். சிவகுமாரனது ஒரு வருட நினைவுநாளான 5 ஜூன் 1975 இல் அதை நிறுவினார்கள். அந்தச் சிலை திறப்பு விழாவுக்கு காசி ஆனந்தன் தலைமை தாங்கினார். தந்தை செல்வா, அமிர்தலிங்கம், கதிரவேற்பிள்ளை, நவரத்தினம், யோகேஸ்வரன் போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்பட்ட விருந்தினர்களாகப் பங்குபற்றினர். பொலிஸ் கெடுபிடிகள் மக்களைத் தடுத்தாலும் அவர்கள் தெருவீதிகளை விட்டு வளைவுகளுக்கால் சிலை திறப்பு இடத்திற்கு வந்து பங்குபற்றினார்கள். கம்பீரமாக 'செய் அல்லது செத்து மடி' என்று சொல்லிக் கொண்டு சிவகுமாரன் உரும்பிராய் சந்தியில் நின்றான். 1977 ஆம் ஆண்டு இனக் கலவரம் வந்த பொழுது அந்த சிலை இராணுவத்தினரால் உடைக்கப்பட்டது.

பின் மக்களின் முயற்சியால் அதே இடத்தில் சிலை புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. 1983இல் மீண்டும் கலவரங்களின் போது பாதுகாப்புப் படையினரால் அது உடைக்கப்பட்டது. பின்னர் சிவகுமாரனின் தாயாரும் இளைஞர்களும் விடுதலைப் புலிகளுடன் பேசி, தாங்கள் புதிய சிலையை அமைக்க விரும்புகிறோம் என ஒப்புதல் பெற்று, அந்தச் சிலை 5 ஜூன் 1990 இல் மாத்தையாவால் திறந்து வைக்கப்பட்டது. அந்த சிலையும் சேதத்துள்ளாக்கப்படவே பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அதே இடத்தில் புதிய சிலை வைக்கப்பட்டு இன்று சிவகுமாரன் சிலையாக நிற்கிறான்.



முதலில் ஸ்தாபிக்கப்பட்ட தியாகி சிவகுமாரனின் சிலை உடைக்கப்பட்ட நிலையில்...
அதன் பீடத்தில் பொறிக்கப்பட்டிருந்த வாசகங்கள்:—
'உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு'; தமிழீழ விடுதலைக்காக உயிரீந்த தியாகி பொன் சிவகுமாரனது உருவச்சிலை 05 — 06 — 1975 அன்று கவிஞர் காசி ஆனந்தன் தலைமையில் சிறை மீண்ட இளைஞன் தம்பித்துரை முத்துக்குமாரசுவாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 'பாடையிலே படுத்தூரைச் சுற்றும்போதும் பைந்தமிழில் அழும் ஓசை கேட்கவேண்டும்'; தோற்றம்:20 — 08 — 1950;
மறைவு: 05 — 06 — 1974.

இவை விடுதலை வரலாற்று உணர்வுகளின் மாற்றங்களில் சுயநலங்களா, யதார்த்தங்களா எனப் புரிந்துகொள்வது கஷ்டம். ஆனால் அந்த வரலாறுகளின் திராணியற்ற தொடர்ச்சிகளை சில சம்பவங்களால் பார்த்து அவற்றை மக்களே உணர்ந்து கொள்ள வேண்டும்.

### 748.எவற்றைச் சொல்லுகிறீர்கள்?

அகிம்சை வழியில்தான் போராட தாம் நம்பிக்கை வைத்திருக்கிறோம் எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அறிக்கைகளும் தந்து, பேச்சுக்களிலும் வெளிப்படுத்தினார்கள். சிவகுமாரன் காலத்திலிருந்து இளைஞர்கள் வைராக்கியமாக சிங்களப் பேரினவாதத்திற்கெதிராக வளர்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களது வளர்ச்சிகள் கூட்டணிக்கு தெரிந்திருந்தன. தங்களைத் தான் அரசியல் திசை நோக்குக்கு அவர்கள் நம்பியிருக்கிறார்கள் என்பதும் புரிந்ததே. அதனால் வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றிக் கொள்ளவும் அதைத் தொடர்ந்து வந்த தேர்தலில் தமிழ் ஈழத்துக்கு ஆணைபெறவும் அவர்களையே நம்பி ஊக்கங்கள் தந்து பாவித்தார்கள். தேர்தலில் தமிழ் ஈழத்துக்கான ஆணையைப் பெற்று, அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானதும் தமிழீழம் அமைப்பதெல்லாம் நாடாளுமன்ற பேச்சுக்களிடையேதான் நடந்தது. காலங்கள் தள்ளிப்போடப்பட்டு விரயமாகின. இளைஞர்களின் கோரிக்கைகள் சிவகுமாரனுக்கு சிலை வைப்பதற்காக அமைக்கப்பட்ட குழு போல் பெயரளவில் கவனிப்புக்காக வைக்கப்பட்டன. இவற்றால் விரக்தியுற்று விடுதலை அமைப்புக்கள் வன்முறைகளை வளர்க்க, அவை ஜே.ஆரின் அரசாங்கத்துக்கு மட்டுமல்ல கூட்டணியினருக்கும் கூட கட்டுப்படுத்துவதற்குச் சங்கடமாகத்தான் இருந்தன. இளைஞர்கள் மக்கள் தந்த ஆணைகளின் கீழ் தமிழ் ஈழம் அமைப்பதற்கான கட்டமைப்புக்களைக் கேட்டார்கள். கூட்டணியினரோ தக்க தருணம் வரும்போது தமிழ் ஈழம் அமையும் எனப் பதிலளித்தார்கள்.

வன்முறைகள் வளர இளைஞர்களை கூட்டணியினர் கட்டுப்படுத்தப் போகிறார்களா அல்லது தான் கட்டுப்படுத்தவா எனக் கேட்ட ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தான் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தருகிறார்களா எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியினரிடம் சவாலாகவே கேட்டார். பின்னர் கூட்டணியினருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

அதன் பின்னர், இன்று மீளக்கைவாங்கக் கோரி கையெழுத்துப் போராட்டம் நடக்கும் பயங்கரவாதச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அந்த சட்டம் நிறைவேற்றப்பட்டபொழுது தமிழர் விடுதலைக் கூட்டணியினர் நாடாளுமன்றத்தில் இருக்கவில்லை. எதிர்த்துப் பேச்சுக்கள் தரவில்லை. வாக்குகளும் அளிக்கவில்லை. நாடாளுமன்றத்தில் பிரசன்னமாக இருந்து அதனைச் செய்த ஒருவர் முன்னாள் சுதந்திரக் கட்சியின் அமைச்சர் – தமிழ்ப் பெண்ணை மணந்திருந்த – அநுராதபுரம் பிரதிநிதி மைத்திரிபால சேனநாயக்க ஒருவர் மட்டுமே.


இவை எல்லாம் கடந்து அவற்றின் அனுபவங்களோடு தமிழ் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் வாழ்ந்த பொழுது அவர்களின் ஆதரவில் தமிழர் கூட்டமைப்பாக நாடாளுமன்றத்தை அலங்கரித்தனர் கூட்டணியினர். சிலர் தமிழ் மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதிகளாக கருதப்பட்டனர். ஆனாலும் ஏகோபித்த தலைவர்களாக விடுதலைப்புலிகளே இருந்தனர். நோர்வே மூலம் ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் மீறப்பட்டு, மஹிந்தவின் அரசு போர் முரசம் கொட்டி, விடுதலைப் புலிகளைப் 'பயங்கரவாதிகளாக' அழிக்க முனைந்தபோது இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கும் பாதகம் வருமென்று கருதி, தமிழ் மக்களுக்கு அரசு பாதிப்புக்கள் தரக்கூடாது என்ற எல்லா கூட்டுக்கட்சிகளும் ஒன்றிணைந்து சமர்ப்பணம் தந்துவிட்டு தங்கள் தங்கள் பகுதிகளுக்கோ இந்தியாவிற்கோ சென்றுவிட்டார்கள். பிரபாகரன் தூக்கிய காவடியை தானே ஆடி இறக்கட்டும், அதன் பின் தாங்கள் தலைவர்களாக அரசுடன் பேச்சுவார்த்தைக்கு வருகிறோம் என்ற சாரம்தான் கூட்டமைப்பின் சமர்ப்பணத்தில் திராணியற்று இருந்தது.



தற்போதுள்ள தியாகி சிவகுமாரனின் சிலை

சிவகுமாரனது நாள்களிலிருந்து இந்தத் தமிழ் தலைவர்களை நம்பி விடுதலைக்காக உலை வைத்தவர்கள் கதி போல் தமிழ் மக்களது விடுதலை அரசியல் நாடாளுமன்ற ஆசனங்களுக்குள் தொடர்கிறது. அதனை உறுதிப்படுத்துவதாகவே பின்னர் வந்தவையும். நடந்தவையும் அமைந்தன.

(வளரும்)




தியாகி பொன்.சிவகுமார் சிலை அமைப்பு நிதி திரட்டலுக்காக விற்பனைக்கு விடப்பட்ட அஞ்சல் உறை

# நாங்கள் சொல்கின்றமையை அரசு ஆறு மாதங்களாக கேட்கவில்லை!

## பகிரங்கமாக அறிவித்தார் மத்திய வங்கி ஆளுநர்



இலங்கை மத்திய வங்கியால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளத் தவறியுள்ளதாக அதன் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஆறு மாதங்களாகப் பரிந்துரை செய்யப்பட்ட முன்மொழிவுகளை அரசாங்கம் கிடப்பில் போட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் யோசனைகளை அமுல்படுத்தினால் அந்நிய செலாவணிப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் கப்பல் ஒன்றுக்கு பணம் செலுத்துவது தொடர்பிலான பிரச்சினை கிடையாது எனவும், நீண்ட காலமாக அந்நிய செலாவணிப் பிரச்சினை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு ஆறு மாதங்களாக ஆலோசனை வழங்கி வரும் நிலையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாகவும், இது ஓர் எரிபொருள் கப்பலுக்கு பணம் செலுத்துவது தொடர்பிலான பிரச்சினை போன்று கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நெருக்கடியான நிலைமைகளில் டொலர் தேவையென்றால் டொலரை பெற்றுக்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியமற்ற 700 பண்டங்களுக்கான வரி அதிகரிப்பு, எரிபொருள் விலைகளை உயர்த்துதல், சூரியசக்தி மற்றும் காற்றாலை மின்சார உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு யோசனைகளை மத்திய வங்கி முன்மொழிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பூஸ்டர் பெறாத பெற்றோர்களால் பிள்ளைகளுக்கும் பெரும் பாதிப்பு!

## விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவிப்பு

கொவிட் வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ள பெரும்பாலான சிறுவர்களின் பெற்றோர்கள் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் என்று கொழும்பு தேசிய சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அதேவேளை, கொவிட் வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் பெருமளவிலான சிறுவர்களின் பெற்றோர்களும் இதுவரை பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் எனத் தகவல் கிடைத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேற்படி வைத்தியசாலையில் தொடர்ந்து முப்பது கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அவர் கூறினார். இத்தகைய நிலையில் உடனடியாக பூஸ்டர் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு தாம் அத்தகைய பெற்றோர்களைக் கேட்டுக் கொள்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாத பெற்றோர்கள் மூலம் பிள்ளைகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று நோய் தொற்றுவது அதிகம் என்றும் அவர் குறிப்பிட்டார். அவ்வாறான பெற்றோர்களில் சிலர் ஒரு தடுப்பூசியையாயினும் இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

# குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் கைது

குற்றச் செயல்கள் பலவற்றுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் வத்தளை வெலியமுனை வீதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் செவ்வாய்க்கிழமை காலை கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வத்தளை மற்றும் வரக்காபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தங்கப் பொருள்களை திருடிய குற்றங்கள் பலவற்றில் ஈடுபட்ட சந்தேக நபருக்கு நாடளாவிய ரீதியில் பல்வேறு நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

சந்தேகநபருக்கு புதுக்கடை, அத்தனகல்ல, கண்டி, கேகாலை, வத்தளை, கல்கிஸை, கம்பஹா, கந்தளாய், மாரவில, நீர்கொழும்பு மற்றும் மினுவாங்கொடை ஆகிய நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரால் திருடப்பட்ட தங்கப் பொருள்கள், நகை நிறுவனங்களுக்கு விற்கப்பட்ட பின்னர் உருக்கி வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகநபர் திருடிய மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மல்வானை பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர் நேற்று (புதன்கிழமை) வத்தளை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். வத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# எரிபொருள் தட்டுப்பாட்டால் இயல்புநிலைகள் பாதிப்பு!

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மக்களின் அன்றாட நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இன்றும் எரிபொருள் நிலையங்களுக்கு அருகில் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்கின்றனர்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகப் போக்குவரத்து மற்றும் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

டீசல் தட்டுப்பாடு காரணமாக தினமும் சுமார் 30 மீன்பிடிப் படகுகள் கடலுக்குச் செல்வதில்லை என தொடந்துவ மீன்பிடி துறைமுக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, மரக்கறி லொறிகளுக்கான டீசலை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், கொழும்பில் மரக்கறி லொறிகளின் வருகை குறைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது மரக்கறிகள் சுமார் 50 வீதம் குறைந்துள்ளன எனப் பேலியகொட மெனிங் சந்தை வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, திருகோணமலை மொரவெள பிரதேசத்தில் சுமார் 300 ஏக்கரில் அறுவடையை விவசாயிகள் ஆரம்பித்துள்ள போதிலும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அறுவடையை இடைநிறுத்தியுள்ளனர்.

# உக்ரைனிலிருந்து நாடுதிரும்ப விரும்பாத இலங்கையர்கள்!

உக்ரைனில் உள்ள 20 இலங்கையர்கள் நாட்டின் எல்லையை கடந்து போலந்து மற்றும் ஹங்கேரிக்கு சென்றடைந்துள்ளனர்.

உக்ரைனில் வசிக்கும் மேலும் 14 இலங்கையர்கள் போலந்து, ஸ்லோவாக்கியா மற்றும் ருமேனியா ஆகிய நாடுகளுக்கு எல்லையைக் கடந்து சென்றுள்ளனர் என உக்ரைன், துருக்கி மற்றும் ஜோர்ஜியாவுக்கான இலங்கைத் தூதுவர் எம்.ஆர்.ஹசன் தெரிவித்துள்ளார்.

எனினும் உக்ரைனின் எல்லையைகடந்தவர்கள் இலங்கைக்கு வருவதற்கு எதிர்பார்க்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையர்கள் சிலர் உக்ரைனியர்களைத் திருமணம் செய்து அந்நாட்டில் நிரந்தர வதிவிடம் பெற்றுள்ளமையே இதற்கு காரணமாகும் என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் தங்கியுள்ள ரஷ்ய மற்றும் உக்ரேனிய சுற்றுலாப் பயணிகளுக்கு மேலதிக நிவாரணங்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் தங்கியுள்ள ரஷ்ய மற்றும் உக்ரேனிய சுற்றுலாப் பயணிகளின் விசா காலத்தை இலவசமாக இரண்டு மாதங்களுக்கு நீடிக்க அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# சட்டவிரோதமாக சங்கு வைத்திருந்தவர் கைது

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஊர்காவற்துறை – மெலிஞ்சிமுனை பகுதியில் சட்டவிரோதமாக கடற்சங்குகளை வைத்திருந்த 67 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என அப்பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஊர்காவற்துறை பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று (புதன்கிழமை) அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடமிருந்து 160 கடற்சங்குகள் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பல்கலை மாணவனும் உயர்தர மாணவனும் வெல்லவாயவில் நீரில் மூழ்கி பரிதாபச் சாவு

வெல்லவாய எல்லேவல நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்குச் சென்ற இரு இளைஞர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் உயிரிழந்துள்ளனர்.

எல்லேவல நீர்வீழ்ச்சியை பார்வையிட கடந்த செவ்வாய்க்கிழமை 7 பேர் கொண்ட இளைஞர்கள் குழுவொன்று சென்றுள்ளனர்.

மேற்படி இடத்தில் நீராடச் சென்ற போதே இந்த அசம்பாவித சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பல மணி நேரம் நீடித்த தேடுதல் நடவடிக்கைக்குப் பின் நீரில் மூழ்கி உயிரிழந்த இரு இளைஞர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

உயிரிழந்தவர்கள் அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயது மற்றும் 22 வயதுடைய இளைஞர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

21 வயதுடைய இளைஞன் மொரட்டுவ பல்கலைக்கழக மாணவன் என்பதுடன் மற்றைய இளைஞன் இம்முறை க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஈ.பி.எவ்., ஈ.ரி.எவ். உட்பட 13 உத்தேச நிதிகள் மேலதிகக் கட்டணத்துக்கு உட்படாது!

## சட்டமா அதிபர் நீதிமன்றில் தெரிவிப்பு

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் உள்ளிட்ட 13 ஓய்வூதிய நிதிகள் உத்தேச மேலதிக கட்டணத்துக்கு உட்படா என சட்டமா அதிபர் கடந்த செவ்வாய்க்கிழமை உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.03.2022இல் வெளியிடப்பெற்றது.